மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) ஆம்.

(இ) இத்திட்டத்தை செயல்படுத்த சுமார் 25 லட்சம் ரூபாய் தேவைப்படுகிறது.

திரு. வை. சுவாமிநாதன் : தலைவரவர்களே, இது தனியார் துறையில் ஒப்படைக்கப்படவிருக்கிறதா அல்லது அரசாங்கமே செய்யப்போகிறதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அரசாங்கமும் தனியாரும் சேர்ந்த கூட்டுத்துறை.

திரு. எஸ். ஜே. ராமசாமி : தலைவரவர்களே, காஞ்சிபுரத்தில் பட்டு சரிகைத் தொழிற்சாலையை அமைப்பதுபற்றி அரசாங்கத்தினால் முன்பு முடிவு செய்யப்பட்டது. ஆனால் இது பேப்பரிலேயே இருக்கிறதே தவிர அதைச் செயற்படுத்த அரசாங்கம் எடுத்துக் கொண்ட முயற்சி என்ன?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அறிஞர் அண்ணா அவர்கள் நம்முடன் இருந்த காலத்திலே இந்தத் தொழிற்சாலை வேண்டு மென்று முடிவு எடுக்கப்பட்டது. ஆனால் தங்கக்கட்டுப்பாடு இருந்த காரணத்தினால் இதற்கு அனுமதி பெறுவதற்குக் காலதாமதம் ஏற்பட்டது. அண்மையில் மத்திய சர்க்கார் அனுமதி அளித்திருக் கிறது. இதற்காக தனி அதிகாரி ஒருவரை, டி. ஆர். ஓ. அளவிலே போட்டு உடனடியாக காஞ்சிபுரத்தில் தொழிற்சாலையைத் துவங்க ஏற்பாடு செய்யப்படுகிறது.

Price of raw silk

* 225 Q.—THIRU K. SAHADEVA KANDER : Will the Hon. the Minister for Industries be pleased to state whether the Government are aware of the steep rice in price of raw silk in this State?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : ஆம். ஏற்றுமதி செய்யத்தக்க பட்டுத் துணி ரகங்களை தயாரிப்பதற்கு "சர்க்கா" பட்டு பயன்படுத்தப் பட்டு வருவதால், மைசூர் மாநில பட்டு உற்பத்தியாளர்கள் மேற்படி பட்டு உற்பத்தியின் அளவைக் குறைத்துவிட்டதே இதற்கு முக்கியக் காரணமாகும். மத்தியப் பட்டு வாரியம் மூலமாக நியாயமான விலையில் கச்சா பட்டு வழங்கப் பெறவும், ஜப்பான் நாட்டிலிருந்து கச்சா பட்டு இறக்குமதி செய்யப் பெறவும் வேண்டி மாநில அரசு இந்திய அரசுடன் முன்னரே கடிதத் தொடர்பு கொண்டுள்ளது.

திரு க. சகாதேவ கண்டர் : மதிப்பிற்குரிய பேரவைத் தலைவரவர்களே, தமிழ்நாட்டிலே நாகரீகம் நாளுக்குநாள் வளர்ந்து கொண்டே போகிறது. இப்படிப்பட்ட நிலையிலே கச்சாப்பட்டின் விலை உயர்ந்துகொண்டிருக்கிறது. எனவே, விலை உயராமல் தடுக்க அரசாங்கம் முன்னெச்சரிக்கையாக நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கச்சாப்பட்டிற்கும் நாகரீகத் திற்கும் தொடர்பு இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. நாம் நம்முடைய பகுதியிலே இந்தப் பட்டைக்கொண்டு ஏராளமான

பட்டுச்சேலைகளைத் தயாரிக்கிறோம். ஆனால் இதற்குத் தேவைப்படும் மூலப்பொருட்கள் பெரும்பாலும் மைசூர் மாநிலத்திலிருந்து வருகிறது. ஹோசூர், தாளவாடி பகுதிகளில் சிறிய அளவில் உற்பத்தி செய்யப்படுகிறது. நாம் எடுத்திருக்கும் முயற்சி, நம்முடைய பகுதியிலே இன்னும் கொஞ்சம் அதிகமாக உற்பத்தி செய்ய, மத்திய சர்க்கார் நமக்குத் தேவையான கைத்தறிப் பட்டை கச்சாப்பாட்டை வழங்க வேண்டுமென்று வற்புறுத்தி வருகிறோம்.

Export of human hair

*226 Q.—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR: Will the Hon. the Minister for Industries be pleased to state:

(a) whether the human hair export from this State has suffered a set back during the year 1969; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) ஆம்.

(இ) தலைமுடி ஏற்றுமதி இந்நாடு முழுவதிலுமே பொதுவாக குறைந்துள்ளது. அதற்கு காரணங்கள் பின்வருவனவாகும்:

(1) செயற்கைப் பொருள்கள் புகுத்தப்படுதல்.

(2) அமெரிக்க ஐக்கிய நாடுகளில் சீன முடி இறக்குமதி செய்வது தடை செய்யப்பட்டிருந்தது. ஆனால் இப்போது அத்தடை படிப்படியாக நீக்கப்பட்டு வருவதால், சீன நாட்டு தலைமுடி பெரும் அளவில், ஐக்கிய நாடுகளின் அங்காடிக்கு வருகிறது.

(3) இந்தோனீசியா, நேபாளம், பாகிஸ்தான் போன்ற பிறநாடுகள் தலைமுடி விற்பனையில் போட்டியிடுவதுமன்றி அதற்கான விலையையும் குறைத்துள்ளன.

திரு. ப. மகாதேவன்: மாண்புமிகு தலைவரவர்களே, ஹிப்பி நாகரீகத்தின் காரணமாக, ஆண்களும் நீளமாக சடைமுடி வளர்த்துக்கொள்ளும் நிலைமையிருப்பதால் முடிவெட்டாமல் இருப்பதைப்பற்றி தகவல் வந்திருக்கிறதா?

(பதில் இல்லை.)

DR. H. V. HANDE: This is a great source of foreign exchange. This was earning us a great deal till such time as the State Trading Corporation entered the field and afterwards there is a lot of confusion between the S.T.C. and the private entrepreneurs who were exporting this human hair previously. I so, may I know whether the State Government is seized of the matter? How is the State Government going to resolve this tangle and see that once again Tamil Nadu comes foremost in the export of human hair?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: சென்னை துறைமுகத்திலிருந்து ஏற்றுமதியாகக்கூடிய தலைமுடியின் விலை மதிப்பு 1966–67-ல் 6 லட்சம்; 1967–68-ல் 26 லட்சம். கனம் அங்கத்தினர் சொல்லுவது போனற குறை தனியார் துறையில் ஏற்றுமதி செய்யப்படுகின்ற நேரத்தில் இருந்தது. எஸ்.டி.சி. மூலம் ஏற்றுமதி செய்யும்போது அவர்கள்